ஜக்கி வாசுதேவ்



(இதில் இருக்கும் செய்திகள் ஈஷா யோக மையத்தில் ஜக்கிவாசுதேவ் அவர்களோடு அன்றாடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற பிரமச்சாரிகளிடமிருந்து சேகரித்தவை. மீடியாவில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பது அவர்கள் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடு)

ப்ளஸ்

● பெற்றோர் வைத்த பெயர் ஜகதீஷ். அப்பா வாசுதேவ் பெயரும் சேர சத்குரு ஜக்கி வாசுதேவ்.

● அப்பா டாக்டர்... ஜக்கியையும் டாக்டராக்க வேண்டும் என்பதுதான் அவரது ஆசை. ஆனால் ஜக்கி படித்தது ஆங்கில இலக்கியம் பட்டப் படிப்பு.

● இளைஞனாக இருந்தபோது, அவரை மிகவும் பாதித்த புத்தகம் காரல் மார்க்ஸின் ''தாஸ் கேப்பிடல்''. இன்று ஈஷா நடத்தும் கிராமப் புத்துணர்வு இயக்கத்துக்கு, அன்றே ஜக்கியின் மனதுக்குள் விதையைப் போட்ட புத்தகம் அதுதான்.

● கட்டடக் கலையின் மீது மிகுந்த ஈடுபாடு, கட்டடக் காண்ட்ராக்டராகவும் இருந்தவர். ஈஷா யோக மையத்தில் காட்டேஜ் கதவு கைப்பிடியிலிருந்து வளாகத்தின் வெளிகேட்டிலுள்ள கொக்கி வரை ஒரு அழகுணர்வு மிளிர்கிறது என்றால், அவர் கட்டடக் கலையின் மீது காட்டும் ஆர்வம்தான்.

● இளமையில் கோழிப் பண்ணை நடத்திய அனுபவம் உண்டு.

● இளைஞனாக இருந்தபோது, காடு மேடுகளில், நாடு முழுக்க மோட்டார் சைக்கிளில் அலைந்து திரிந்தவர்.

● தேர்தலில் வோட்டு போடுவதில் ஆர்வம். ''முன்

[+] ப்ளஸ் [-]மைனஸ்= பெரும்புள்ளி

பாம்புகளுடன் விளையாடும் வாசுதேவ்!

னுரிமையை நிராகரித்து விட்டு, வரிசையில் நின்று தான் போடுவார். எந்த ஒரு பொது இடத்திலும் மக்களில் ஒருவராக நடந்து கொள்வது ஜக்கியின் தனிப்பாணி.

● கம்பு, ராகி, கேழ்வரகு - இவைகளிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களை விரும்பிச் சாப்பிடுவார். நேரமும் இருந்து, மாவும் இருந்தால், ஜக்கியின் கைவண்ணத்தில் முறுகலான தோசை தயாராகி விடும். இவர் ஒரு தோசைப் பிரியர்.

● கால்ஃப், வாலிபால், கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம். யோகா மையத்தில் இருக்கும்போது மாலையில் நேரம் கிடைத்தால் ''நெட்டைக் கட்டுப்பா'' என்று வாலிபால் ஆடக் களத்தில் குதித்து விடுவார்.

● தாம் உடுத்தும் ஆடைகளைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்வார். ஒரு சமயம் ஜீன்ஸ், டீ-ஷர்ட், சன் கிளாஸ் என்று வளையவரும் ஜக்கி - வேட்டி, பஞ்சகச்சம், ஜிப்பா என்று பாரம்பரிய உடையிலும் அசத்துவார்.

● யாரும் காலில் விழுவது பிடிக்காது. (ஆனால் தடுத்தாலும் விழுகிறார்கள்). கோபமா... மூச்...!

● சீரகத் தண்ணீரும் சுக்குக் காப்பியும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

மைனஸ்

● ஜக்கி காரை ஸ்டார்ட் செய்தால் யோக மையத்தில் உள்ளவர்களுக்கு ஹார்ட் பீட் எகிறும். தேசிய நெடுஞ்சாலையெனில் வேகம் மணிக்கு 140 கி.மீ. யைத் தொடும்!

● படிக்கும் போதே பாம்புகளைப் பிடித்து வருமானத்திற்கு வழி தேடிக் கொண்டவர். இப்போதும், விஷப் பாம்புகள் உட்பட எல்லா வகைப் பாம்புகளையும் பிடித்துக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்ளும்போது ''குரு மேல் உள்ள பாசத்தால்'' அன்பர்கள் ஆடிப் போய் விடுகிறார்கள்.

● யோகா மையத்தைப் பற்றி அவதூறுகளோ, தவறான செய்திகளோ மீடியாவில் வரும் போது, அவற்றை மறுக்க வேண்டும் என்று பரபரப்பைக் காட்டும் சிஷ்யர்களை அமைதிப்படுத்துவது. ''நம் மடியில் கனமில்லை; எனவே கவலையில்லை'' என்பது ஜக்கியின் அணுகுமுறை.

● தாம் மட்டும் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, பத்திரிகையாளர்களைத் தரையில் அமர வைத்து பேட்டி அளிக்கிறார் என்பது சில பத்திரிகையாளர்களின் வருத்தம். உள்ளூர் பத்திரிகையாளர்களோடு இன்னமும் ''ரேப்போ'' வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் அன்பர்கள் சிலரின் கருத்து.

- ஸ்ரீநி